# தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள்

**ந.க.எண்.000908/கே/இ3/2025, நாள்.20-01-2025**

பொருள்: பள்ளிக் கல்வி – அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் மணற்கேணி செயலியை அதிகளவில் ஆசிரியர்கள் / மாணவர்கள் பயன்டுத்த அறிவுறுத்தல் – – மணற்கேணி செயலி குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல் – பெற்றோர் ஆசிரியர் கூட்டங்கள் நடத்தி மணற்கேணி செயலியின் காணொலி காட்சிகளை பெற்றோர் அறிய செய்தல் – அறிவுரைகள் வழங்குதல் தொடர்பாக.

பார்வை:
1. பள்ளிக்கல்வித் துறை செயலாளரின் ஆய்வுக்கூட்ட நாள்.20.12.2024
2. அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் துறைக் தலைவர்களுக்கான ஆய்வுக் கூட்டத்தில் வழங்கிய அறிவுரைகள் நாள்.07.01.2025

*******

தமிழ்நாட்டில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணிப்பொறிகள் (Desktop Computers), மடிக்கணினிகள் (Laptops) வழங்கப்பட்டு உள்ளன. மேலும் தமிழ்நாட்டில் செயல்படும் அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் திறன்மிகு வகுப்பறைகளும் (Smart Class Room) உயர் தொழில் நுட்பக் கணினி ஆய்வகங்களும் (High Tech Labs) உள்ளன. இதன் மூலம் கற்றல் கற்பித்தல் செயல்பாட்டில் புதிய அறிவியல் நுட்ப பயன்பாடுகளின் வழியாக சிறந்த அனுபவங்களை மாணவர்கள் பெருமளவில் பெற்று வருகின்றனர்.

இத்தகைய கணினி சார்ந்த புதிய அறிவியல் நுட்பங்களுடன் கற்றல் செயல்பாட்டிற்கு பெரிதும் துணைபுரியும் வகையில் மணற்கேணி செயலி வடிவமைக்கப்பட்டு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

பார்வையில் காணும் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்ட அறிவுரைகள் சார்ந்து அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களின் உடனடி கவனம் பெரிதும் ஈர்க்கப்படுகிறது.

பார்வையில் காணும் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டபடி விரைவு துலங்கல் குறியீடு (Quick Response Code – QR Code ) அனைத்து பள்ளிகளிலும் ஒட்டப்பட்டு உள்ளதா என்பதையும் அதன் வழியாக ஆசிரியர்கள் தங்களின் கற்பித்தல் பாடப் பொருளுக்கு ஏற்றவாறு மாநில பாடத்திட்ட புத்தகங்களில் இடம்பெற்ற பாடங்களுக்கான காணொலி காட்சிகளின் வீடியொக்களை பொருத்தமான இடங்களில் பயன்படுத்தி மாணவர்களின் கற்றலை மெம்படுத்துகின்றார்களா என்பதையும் முதன்மைக் கல்வி அலுவைர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் பள்ளிப் பார்வை/ஆய்வுகளின்

போது உறுதி செய்திடல் வேண்டும். மேலும் எத்தனை பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள் மணற்கேணி செயலியை பதிவிறைக்கம் செய்துள்ளனர் என்பதை 24.01.2025 ஆம் தேதிக்குள் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் கண்டறிய வேண்டும்.

மணற்கேணி செயலியை பதிவிறக்கம் செய்யாத பள்ளிகள் / ஆசிரியர்களை 31.01.2025 ஆம் தேதிக்குள் பதிவிறக்கம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பள்ளி மேலாண்மைக் குழு கூட்டத்தில் பங்கேற்க வரும் மாணவர்களின் பெற்றோர்களிடத்தில் மணற்கேணி செயலி குறித்த விழிப்புணர்வினை பள்ளி ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள் ஏற்படுத்திடவும் இச்செயலியை அக்கூட்டம் நடைபெறும் நாளன்றே அவர்களது பெற்றோர்களின் கைபேசியில் Google Play Store–யில் இருந்து பதிவிறக்கம் செய்து கொடுத்து அச்செயலி வழியாக பாட விவரங்களை எவ்வாறு மாணவர்கள் வீட்டில் பயன்படுத்தி கற்க முடியும் என்பது குறித்தும் மீண்டும் தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது..

மணற்கேணி செயலியை பதிவிறக்கம் செய்துள்ள எண்ணிக்கை தமிழ்நாட்டில் அரசுப் பள்ளிகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையின் சிறு பகுதியாகவே உள்ளது. அனைத்து பெற்றோர்கள் / மாணவர்களிடத்தில் இச்செயலி மூலமாக கற்றல் செயல்பாடு நடைபெறுவதை முதன்மைக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்திடல் வேண்டும். மேலும் அரசுப் பள்ளிகளில் Desktop Computers, Laptops, TABs, Smart Board மற்றும் High Tech Labகளின் மூலம் கற்பித்தல் செயல்பாடு ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, அனைத்து ஆசிரியர்களும் தங்களது Mobile phone, Desktop Computers, Laptops, TABs, Smart Board மற்றும் High Tech Labயில் மணற்கேணி செயலி அல்லது https://manarkeni.tnschools.gov.in என்ற இணையதளத்தில் காணொலி காட்சிகளை பதிவிறக்கம் செய்து வகுப்பறைக் கற்றல் செயல்பாட்டில் பயன்படுத்துவதை முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்ட கல்வி அலுவலர்கள் உறுதி செய்திடல் வேண்டும். மணற்கேணி செயலி மூலமாகவோ அல்லது https://manarkeni.tnschools.gov.in என்ற இணையதள வழியாகவோ கட்டணம் எதுவுமின்றி அனைவரும் எளிதில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரையுள்ள பாடங்களுக்கான காணொலி காட்சிகளை பதிவிறக்கம் செய்ய முடியும் (Open source and can be downloaded free) என்பதை ஆசிரியர்களுக்குத் தெரிவித்திடல் வேண்டும். மேலும் எத்தனை ஆசிரியர்கள் / மாணவர்கள் அல்லது மாணவர்களின் பெற்றோர்கள் காணொலி காட்சிகளை பதிவிறக்கம் செய்துள்ளனர் என்பதை அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் 31.01.2025 ஆம் தேதிக்குள் கண்டறிய வேண்டும்.

6 முதல் 12 ஆம் வகுப்புக்குரிய காணொலி காட்சிகளை பதிவிறக்கம் செய்யாத ஆசிரியர்கள் / மாணவர்கள் அல்லது மாணவர்களின் பெற்றோர்களுக்கு 31.01.2025 ஆம் தேதிக்குள் மணற்கேணி செயலி மூலமாகவோ அல்லது https://manarkeni.tnschools.gov.in என்ற இணையதள வழியாகவோ காணொலி காட்சிகளை பதிவிறக்கம் செய்து

பயன்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

22.01.2025 லிருந்து 25.01.2025 ஆம் தேதிக்குள் கற்றல் செயல்பாட்டிற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் சிறப்பு முகாம்களை செயல்படுத்தி பள்ளியில் பணிபுரியும் அனைத்து ஆசிரியர்களுக்கும் மணற்கேணி செயலி மற்றும் https://manarkeni.tnschools.gov.in என்ற இணைய முகவரியில் கட்டணம் எதுவுமின்றி 6 முதல் 12ஆம் வகுப்பு வரையுள்ள பாடங்களுக்கான காணொலி காட்சிகளை பதிவிறக்கம் செய்ய முடியும் என்பது குறித்த சிறந்த புரிதலையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்திடல் வேண்டும்.

ஆசிரியர்களின் இத்தகைய புரிதலுக்குப் பின்னர் 27.01.2025 முதல் 31.01.2025 ஆம் தேதிக்குள் மாணவர்களின் பெற்றோர்களுக்கு மணற்கேணி செயலி குறித்த சிறந்த புரிதலையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்த பள்ளி அளவிலான பெற்றோர் – ஆசிரியர் கூட்டங்களை ஒவ்வொரு தலைமை ஆசிரியரும் ஏற்பாடு செய்வதற்கு மாவட்டக் கல்வி அலுவலர்கள் மூலம் உரிய அறிவுரைகளை வழங்க அறிவுறுத்தப்படுகிறார்கள்.

பார்வை (2)யில் காணும் செயல்முறைகளில் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட 120 காணொலிகளின் லிங்க் (இணைய இணைப்பு) https://docs.google.com/spreadsheets/d/1VZ2KSOTpxlaxecO6pq7LhqJHsxD-3jglOCGlCyObD38/edit?usp=sharing அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டு அதனை பள்ளிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வருதல் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை மாநில பாடத்திட்டத்தில் இடம் பெற்ற பாடங்களின் தமிழ் மற்றும் ஆங்கில மொழிவழி காணொலிகளை இணைப்பில் கண்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி ஆசிரியர்கள் – மாணவர்கள் – பெற்றோர்கள் கைபேசியில் பதிவிறக்கம் செய்து நிறுவிடவும் அவற்றை கற்றலில் பயன்படுத்திடவும் தேவையான அறிவுரைகளை வழங்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

கற்றல் செயல்பாட்டில் மாறி வரும் புதிய தொழில் நுட்ப சூழலுக்கு ஏற்ப மாணவர்களை தயார்படுத்தவும் அவர்களின் பெற்றோர்களை புதிய கற்றல் சூழலுக்கு உட்படுத்தவும் மாணவர்களுக்கு கற்பித்தல் பணியினை மேற்கொள்ளும் ஆசிரியர்கள் நடைமுறை வாழ்வின் புதிய வரவுகளை ஏற்றுக் கொள்ளும் விழிப்புணர்வுடன் கூடிய சிறந்த புரிதலைக் கொண்டு பாட விவரங்களை அணுகுவதற்கு தேவையான அறிவுரைகளை முதன்மைக் கல்வி அலுவைர்கள். மாவட்டக் கல்வி கல்வி அலுவைர்களின் மூலம் அனைத்து ஆசிரியர்களுக்கும் வழங்கிட அறிவுறுத்தப்படுகிறார்கள்.

2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினியுடன் கூடிய கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகள் நடைபெறுவதையும் மணற்கேணி செயலி மற்றும் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்

பயிற்சி நிறுவனம் உருவாக்கியுள்ள காணொலிகள் வகுப்பறை செயல்பாட்டில் தொடர்புடைய பாடங்களுக்காக பயன்படுத்தப்படுவதை மாவட்டக் கல்வி அலுவலர்கள் உறுதி செய்திடல் வேண்டும். அதற்கான அனைத்து வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுரைகளை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் வழங்குவதோடு மணற்கேணி செயலி பயன்படுத்தும் ஆசிரியர்கள் – மாணவர்கள் – பெற்றோர்கள் ஆகிய பயனாளர்களின் எண்ணிக்கையை அதிகளவில் உயர்த்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இணைப்பு :
மணற்கேணி செயலி – பயனர் கையேடு

**ஒப்பம்/…….**
**பள்ளிக் கல்வி இயக்குநர்**

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

நகல்: உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாதிரிப் பள்ளிகள், சென்னை–6. தகவலுக்காக பணிவுடன் அனுப்பலாகிறது.

# தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வி துறை
# மணற்கேணி செயலி - பயனர் கையேடு

மணற்கேணி என்பது தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வித்துறையின் இணையவழி, இலவச கற்றல் தளமாகும். இது மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கானது. கீழ்கண்ட ஆவணம் மணற்கேணி செயலியின் முக்கிய அம்சங்கள் பற்றிய குறிப்புகளையும் அதன் கைபேசி வடிவத்தை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துவதற்கான விரிவான வழிமுறைகளையும் வழங்குகிறது.

இணைய செயலிக்கான இணைப்பு : **https://manarkeni.tnschools.gov.in**

கைபேசி செயலிக்கான இணைப்பு :
**https://play.google.com/store/search?q=manarkeni+app&c=apps&hl=en**

## மணற்கேணி செயலி - சிறப்பம்சங்கள்

மணற்கேணி தளமானது 1 முதல் 12 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு உதவும் வகையில் பல்வேறு கற்றல் கருவிகள் மற்றும் வளங்களை வழங்குகிறது. செயலியின் சிறப்பம்சங்களை கீழே காணலாம்:

- கற்றல் காணொளிகள்:
  வகுப்பு மற்றும் பாடம் வாரியாக வடிவமைக்கப்பட்ட காணொளிப் பாடங்கள், மாணவர்கள் படிப்படியாக கருத்துக்களைப் புரிந்துகொள்ள உதவும்

- அறிவோம் தெளிவோம் (வினாடி-வினா) பிரிவு:
  வகுப்பு வாரியாக வடிவமைக்கப்பட்ட வினாடி-வினாக்கள், கற்றலை வலுப்படுத்தவும், தேர்வுகளுக்கு தயாராகவும் உதவும்

- தேர்வு தயார்படுத்தும் நுட்பங்கள் பிரிவு:
  மாணவர்கள் தேர்வுக்கு தயாராவதற்கு ஏதுவாக நினைவாற்றல் நுட்பங்கள் மற்றும் மனவரைபடம் உள்ளிட்ட பயனுள்ள கற்றல் உத்திகளை கற்றுக்கொள்ள உதவும்

- உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டல் பிரிவு:
  தொழில்துறை வல்லுநர்களிடமிருந்து வேலைவாய்ப்புகள், சிறந்த கல்லூரிகள் மற்றும் உயர்கல்வி பாதைகள் குறித்த வழிகாட்டுதலைப் பெற உதவும்

- தன்மேம்பாட்டு தொடர் பிரிவு:
  தன்னம்பிக்கை மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியை ஊக்குவிக்கும் தன்மேம்பாட்டு கருத்துக்களை கற்றுக்கொள்ள உதவும்


# தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வி துறை
# மணற்கேணி செயலி - பயனர் கையேடு

## <u>மணற்கேணி கைபேசி செயலியை பதிவிறக்கம் செய்தல்</u>

கைபேசி செயலிக்கான இணைப்பு :
[https://play.google.com/store/search?q=manarkeni+app&c=apps&hl=en](https://play.google.com/store/search?q=manarkeni+app&c=apps&hl=en)

- கூகுள் பிளே ஸ்டோருக்குச் செல்லவும்
- "Manarkeni App (மணற்கேணி செயலி)" அல்லது "TNSED Manarkeni (TNSED மணற்கேணி)" என்று தேடவும்
- தேடல் முடிவுகளில் இருந்து TNSED Manarkeni (TNSED மணற்கேணி) செயலியைத் தேர்ந்தெடுக்கவும்
- உங்கள் கைபேசியில் செயலியை பதிவிறக்கம் செய்ய 'Install (நிறுவு)' என்பதைக் கிளிக் செய்யவும்

வழிகாட்டுதலுக்கு வழங்கப்பட்டுள்ள திரைப்பிடிப்புகளைப் பார்க்கவும்




# தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வி துறை
# மணற்கேணி செயலி - பயனர் கையேடு


## <u>மணற்கேணி செயலியைப் பயன்படுத்துதல்</u>


### <u>செயலியில் உலாவுதல்:</u>


- செயலியை நிறுவிய பின், அதைத் திறந்து வகுப்புகள் மற்றும் பாடங்களின் பட்டியலைக் கொண்ட முகப்புப் பக்கத்தை ஆராயவும்

  வழிகாட்டுதலுக்கு வழங்கப்பட்டுள்ள திரைப்பிடிப்புகளைப் பார்க்கவும்








# தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வி துறை
# மணற்கேணி செயலி - பயனர் கையேடு

## அறிவோம் தெளிவோம் (வினாடி-வினா) பிரிவு:

- வகுப்பு வாரியான வினாடி வினாக்களைப் பயன்படுத்த, '*Quiz* (வினாடி வினா)' பிரிவை அணுகவும்

  வழிகாட்டுதலுக்கு வழங்கப்பட்டுள்ள திரைப்பிடிப்புகளைப் பார்க்கவும்




# தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வி துறை
# மணற்கேணி செயலி - பயனர் கையேடு

<u>தேர்வு தயார்படுத்தும் நுட்பங்கள் பிரிவு:</u>

உங்கள் படிப்புத் திறன் மற்றும் தேர்வுக்கான உத்திகளை மேம்படுத்த , *'Study Techniques* (தேர்வு தயார்படுத்தும் நுட்பங்கள்)' பிரிவில் உள்ள ஒளிக் காட்சிகளைத் தேடவும்

வழிகாட்டுதலுக்கு வழங்கப்பட்டுள்ள திரைப்பிடிப்புகளைப் பார்க்கவும்



# தமிழ்நாடு அரசு பள்ளிக்கல்வி துறை
# மணற்கேணி செயலி - பயனர் கையேடு

## <u>தன்மேம்பாட்டு தொடர் பிரிவு:</u>

தன்னம்பிக்கை மற்றும் தனிப்பட்ட வளர்ச்சியை ஊக்குவிக்கும் தன்மேம்பாட்டு புத்தகங்கள் மற்றும் கருத்துக்களை கற்றுக்கொள்ள, ‘*Books Intro Series*’ பிரிவில் உள்ள ஒளிக் காட்சிகளைத் தேடவும்

